1969 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையை நடத்திச் செல்லும் பணியில் பேரவைத் தலைவருக்குத் தங்கள் ஒத்துழைப்பு நல்ல வகையில் இருக்கும் என்றும், தாங்கள் இந்த சபையின் மரபின் வழியில் பணியாற்றுவீர்கள் என்றும் கூறி, இந்த மன்றத்தின் சார்பாக மீண்டும் வாழ்த்துகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற, மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் பெர்ணண்டோ அவர்கள், அடக்கமான உணர்ச்சியோடு, இனிய சொல்லாற்றல் வாய்ந்தவர்கள். அவர்கள் எனக்குத் துணைவராக வந்திருக்கிறார்கள். ஒரு துணை வேண்டும் என்று நினைக்கின்ற நிலையில், தனக்குத் துணையாக, வரக் கூடியவர் இடர் வரும் காலத்தில், தனக்குத் துணையாக, வலிவுடையவராக இருந்தால்தான் அவருக்குத் துணை போக முடியும். அன்றி, வலுவற்றவர்களாக இருப்பது முறையாகாது. அந்த வகையில், சட்டப் பேரவையில் சட்டம் பயிலாதவர் தலைவராக இருக்கும் போது, சட்டம் பயின்ற ஒருவர், அவருக்குத் துணைவராக, துணைத் தலைவராக இருப்பது நிறைந்த பொருத்தமுடையது. அந்த வகையில் அவர்கள் எனக்குத் துணையாக நின்று, பேரவையின் மரபையும், மாண்பையும் காத்து, பேரவையின் ஒத்துழைப்பையும் பாராட்டையும் பெறுவார்கள் என்று குறிப்பிடுகிறேன்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணண்டோ : தலைவர் அவர்களே, தமிழ்நாடு பேரவையின் துணைத் தலைவராக இந்த மன்றத்திலுள்ளவர்கள் ஒருமனதாக, போட்டியின்றி, என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக, எல்லா உறுப்பினர்களுக்கும், அமைச்சரவைக்கும் நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். என்னுடைய வெற்றியைப் பாராட்டிப் பேசிய மாண்புமிகு முதல் அமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர், என்னுடைய மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு திரு. ஆதிமூலம், திரு. சங்கரய்யா, இவர்கள் பேசும் போது, எனக்கு அறிவுரைகளைக் கூறியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்த மன்றத்தின் மரபுகளைக் காக்கும் வகையில், தலைவர் அவர்கள் கடைபிடித்துள்ள மரபையும் கண்ணியத்தையும் காக்கும் வகையில், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்ட வகையிலும் ஒத்துழைத்துப் பணியாற்றுவேன் என்று கூறி, இந்த மாமன்றத்தில் நியாயத்தோடும், ஜனநாயகத்தோடும் நடந்துகொள்வேன் என்று கூறி அமர்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) துணை வினாக்கள் கேட்க எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் தங்களுக்குப் போதிய துணைக் கேள்விகள் கேட்க சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மொத்தம் 74 துணைக் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன;

அவற்றில் 12, அவர்களுடைய கட்சி உறுப்பினர்கள் கேட்க வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. சிமைச்சாமிக்கு 3, டாக்டர் ஹாண்டேக்கு 5, திரு. கரியமாணிக்கம் அம்பலத்திற்கு 1, திரு. போஜன் அவர்களுக்கு 2, திரு. வெங்கடசாமிக்கு 1, ஆக அவர்களில் ஐந்து பேர்களுக்கு, 74-ல் 12 துணைக் கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர் கட்சி உறுப்பினர்களுக்கு துணைக் கேள்விகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்ற குறையை இனியும் மாண்புமிகு உறுப்பினர் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

6. 1968-69-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை—பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1968-69ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை மீதும் 1964-65-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதும் பொது விவாதம் நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சுவாமிநாதன் அவர்கள் முதலில் பேசுவார்கள்.

* **திரு. வை. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கும்படியான உய்யகொண்டான் ஆற்றில் திருச்சி எரிகாரப் பொருள் தொழிற்சாலையின் கழிவுநீர் விடுவதைத் தடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென அன்றைய பொதுப்பணி அமைச்சரான இன்றைய முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அமைச்சர் அவர்களும் அதை நேரில் சென்று பார்த்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை அந்த ஆற்றில் கழிவு நீர் விடுவதைத் தடுக்க ஏற்பாடு செய்யாததால் அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இனியும் கழிவுநீர் உய்யக்கொண்டானில் வந்தால் நிலங்களைத் தரிசாகப் போட வேண்டிய நிலைமை ஏற்படும். இதை பலமுறை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் அந்தப் பகுதி விவசாய மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். தொழில் அமைச்சர் அவர்கள்கூட, ஆகாய விமானத்தின் மூலம் பூச்சிகளுக்கு மருந்து தெளிக்கும்போது நிலங்கள் கழிவுநீரால் பாதிக்கப்பட்டு பூச்சி அரித்திருப்பதைப் பார்த்திருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாய மக்கள் எல்லாம் சேர்ந்து போராடப் போகிறோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துக் கூறியும், அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவில்லை. இதன் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு, நிலங்களைத் தரிசாகப் போட வேண்டிய நிலை ஏற்பட்டு, விவசாய மக்கள் கஷ்டப்படும் நிலைதான் அங்கு இருந்து வருகிறது